1969 ஆகஸ்ட் 18]

பார்த்து, அந்தந்த மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்கள் சொல்லுகிறார்களோ அதற்குத் தகுந்தாற்போல் அரசு பங்கிட்டுத் தந்து கொண்டிருக்கிறது. தருமபுரி மாவட்டத்திற்குக் கொஞ்சம் இரக்கக் கருணையோடு அதிகமாக அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, கேள்வி எண் 16. திரு. சித்தன் அவர்களுடைய வினாவிற்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் விடையளிப்பார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நெடு நேரமாகக் கையைத் தூக்கிக் கொண்டே இருக்கிறேன். கை கூட வலிக்கிறது. சென்ற கேள்விக்குத் துணை வினா ஒன்றைப் போட அனுமதி அளிக்க வேண்டும். உணவுப் பிரச்சினையைப்பற்றிய முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் மட்டுமல்ல. உறுப்பினர்கள் பலர் கையைத் தூக்கிக் கொண்டிருந்தார்கள். சென்ற கேள்விக்கு நிறைய துணைக் கேள்விகளை அனுமதித்திருக்கிறேன். திரு. சித்தன் அவர்களுடைய 16 எண்ணுள்ள கேள்விக்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் விடையளிக்கலாம்.

Vermiculate deposits near Thirupathur.

* 16 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the progress made in the survey undertaken to explore Vermiculate deposits near Thirupathur in North Arcot district ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1965-66-ஆம் ஆண்டுகளில் மாநில பூவியல் (கனிவள ஆராய்ச்சிப்) பிரிவினால் திருப்பத்தூர் அருகிலுள்ள சேவத்தூரில் காணப்படும் வெர்மிகுலேட் கனிப் பொருள் பற்றிய விவரமான ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. பெருமளவில் பகுதி பகுதியாக ஆராய்ந்து சோதனை முறையில் அகழ்ந்து பார்த்ததில் இப்பகுதியில் 190,000 டன் வெர்மிகுலேட் கிடைக்கும் எனத் தெரிய வந்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெர்மிகுலேட் படிவங்களிலிருந்து என்னென்ன பொருள்கள் செய்யப்பட முடியும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆராய்ச்சி வடார்க்காடு மாவட்டத்திலே செய்யப்படுகிறது. பொருள்களை உஷ்ணப் படுத்தினால் விரிவாக்கும் தன்மை இதற்கு இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து என்னென்ன பொருள்களைச் செய்யலாம் என்பதைப் பற்றியும் ஆராய்ந்து ஒரு எக்ஸ்ஃபோலியேடெட் வெர்மிகுலேட் தொழிற்சாலை ஆரம்பிக்கலாமா என்று அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது. இதிலிருந்து பெயின்ட்ஸ்,

லேட் வெயிட் ரிஃப்ராக்டரி ஆகியவைகளெல்லாம் செய்யலாம் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உஷ்ணப்படுத்தினால் விரிவடையக்கூடிய தன்மையுள்ள உப பொருள்களை எந்த எந்தத் தொழில்களிலே பயன்படுத்தலாமோ அதற்கெல்லாம் இந்தப் பொருள் பயன்படும்.

திரு. இல. பலராமன் : இந்த ஆராய்ச்சியை மத்திய அரசு ஏற்றுக்கொண்டதா ? அல்லது, மாநில அரசு ஏற்றுக்கொண்டதா ? இந்த ஆராய்ச்சி நிபுணர்களைக் கொண்டு வடார்க்காடு மாவட்டத்தில் மேலும் பல கனிப்பொருள்கள் இருப்பதைக் கண்டறிய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : என்னுடைய பதிலில், "மாநில பூவியியல் (கனிவள ஆராய்ச்சிப்) பிரிவு" என்று சொன்னேன். நம்முடைய துறைதான் ஆராய்ச்சி செய்து வருகிறது. இதுபோல், வடார்க்காடு மாவட்டத்திலும் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் கஞ்சமலையில் கிடைக்கக்கூடிய இரும்பு தாதுப் பொருள், தொடர்ந்து வடார்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை, திருப்பத்தூர் பகுதி வரை கிடைக்கலாம் என்று கூட ஒரு ஆராய்ச்சி இருக்கிறது. அந்த ஆராய்ச்சியும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர், ஸார், இந்த வெர்மிகுலைட் படிவம் நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர்ப் பகுதிக்குப் பக்கத்தில் இருக்கும் ஸ்ரீவைகுண்டத்தில் அதிகமாகக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கூறுகிறார்களே, அதுபற்றி ஏதாவது தகவல் இந்த ஆட்சிக்கு வந்ததா ? அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : யார் கூறினார்கள் என்று சொன்னால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. கே. சகாதேவக் கண்டர் : அந்தத் தொழிற்சாலை பற்றிய பரிசீலனை எப்பொழுது முடிவு பெறும் ? அந்தத் தொழிற்சாலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் தகவல்படி, 190,000 டன் கிடைக்கக் கூடும். இதை ஒட்டிய பகுதிகளிலும் இதே பொருள் கிடைக்குமா என்ற ஆராய்ச்சியும் நடைபெற்று வருகிறது. அம்பத்தூரில் இந்தத் தொழிற்சாலையை வைக்கலாமா என்று இப்பொழுது நம்முடைய தொழில் இலாக்கா பரிசீலித்து வருகிறது. எந்த அளவு இயந்திரங்கள் கிடைக்க முடியும், எந்த அளவு பொருள்களை இங்கே கொண்டுவர முடியும் என்று பரிசீலித்ததற்குப் பின்னர் தான் முடிவு செய்ய முடியும்.

TRUTH ALONE TRIUMPHS